1

**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** — INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110265

1. District / மாவட்டம் : தேனி  PS / காவல்நிலையம்: ல.ஒ.த.பிரிவு  Year / ஆண்டு: 2020  FIR No. / மு.த.அ. எண்: 4/2020  Date / நாள்: 5.11.2020

2. (i) Act சட்டம்: CrPC  Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: PC Act 1988 as amended  Sections பிரிவுகள்: 7, 8

   (iii) Act சட்டம்: by the PC (Amendment) Act 2018.  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : 4.11.2020  Date from / நாள் முதல் : 4.11.2020  Date to / நாள் வரை :

   Time Period / நேர அளவு :  Time from / நேரம் முதல் : 15.30 hrs.  Time to / நேரம் வரை : 21.30 hrs.

   (b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 5.11.2020  Time / நேரம் : 11.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 5.11.2020  Time / நேரம் : 11.30 hrs.

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 20 கி.மீ தென்மேற்கு

   Beat Number / முறைக் காவல் எண் :  (b) Address / முகவரி : சார்பதிவாளர் அலுவலகம் [illegible] பஜார், போடிநாயக்கனூர் தேனி மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District / மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. மு. நாகேந்திரன்  (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : திரு. [illegible] நாகேந்திரன்

   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு :  (d) Nationality / நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :

   Date of Issue / வழங்கப்பட்ட நாள் :  Place of Issue / வழங்கப்பட்ட இடம் :

   (f) Occupation / தொழில் : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தேனி  (g) Address / முகவரி : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், தேனி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) / தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. C. [illegible] உதவியாளர் (பொறுப்பு சார்பதிவாளர்) போடிநாயக்கனூர், தேனி
   2) திரு. P. முருகன் (50) உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், போடி. — do —
   3) திருமதி. B. [illegible] (43) இளநிலை உதவியாளர் — do —
   4) K. [illegible] (..) அலுவலக உதவியாளர் — do —

8. Reasons for delay in reporting by the complainant / Informant: / குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ([illegible])

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 5.11.2020 / 14.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் …………………
Rank: நிலை ………………… No. எண் ……….

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

3

முதல் தகவல் அறிக்கையின் காலம் 7-ன் தொடர்ச்சி

(தனிநபர்கள்)

5. அ.கார்த்திக், 28/2020, (பத்திர எழுத்தர்),
த/பெ.அப்பாவு,
4வது தெரு,TVKK நகர்,
போடிநாயக்கனூர், தேனி.

6. திரு.ரா.முருகன், 58/2020, (பத்திர எழுத்தர்),
த/பெ. ராமர்,
தெற்கு தெரு, பங்கஜம் ப்ரஸ் வழி,
போடிநாயக்கனூர், தேனி.

7. திரு.சு.சிவசங்கரன்,47/2020, (பத்திர எழுத்தர்),
த/பெ. சுந்தரராஜ்,
12/A, தென்றல் நகர்,
போடிநாயக்கனூர், தேனி.

8. திரு.கா.சங்கர், 32/2020, (பத்திர எழுத்தர்),
த/பெ. P.கார்மேகம்,
இளங்கோவடிகள் தெரு,
30 வது வார்டு,
போடிநாயக்கனூர், தேனி.

9. திரு.பெ.பிரகாஷ், 21/2020, (இடைத்தரகர்)
த/பெ. பெருமாள்,
எண்.5, 13 வது வார்டு,
நகராட்சி காலனி,
போடிநாயக்கனூர், தேனி.

Guthik
5/4/2020
Inspr/ VACU
Theni.

**Submitted:**

இன்று 04.11.2020-ம் தேதி மதியம் 03.30 மணிக்கு காலம்-4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் தேனி மாவட்டம், காமராஜ் பஜார், போடிநாயக்கனூர், அரசு கட்டிடத்தில் இயங்கிவரும் போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவாளர்களிடமிருந்து பணம் பெறப்படுவதாக கிடைத்த நம்பகமான தகவலின்பேரில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.செ.மகேஸ்ராஜா அவர்கள் ஆஜரில் இருந்தார். அவரிடம் ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் அவர்கள், தன்னையும் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டியையும் சோதனைக்காக வந்திருப்பதுபற்றி தெரிவித்து அறிமுகம் செய்து வைத்தார். சார்பதிவாளர், அலுவலகமானது போடிநாயக்கனூர் to மூணார் சாலையில் கிழக்கு பார்த்து பிரதான வாசலுடன் கீழ்தளம் மட்டும் 'கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. பத்திரபதிவு அலுவலகம் நான்கு புறங்களிலும் சுற்றுசுவர் அமைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தின் வெளியே இடதுபுறம் வட மேற்கு மூலையில் கழிப்பறை அமைந்துள்ளது. கழிப்பறைக்கு கிழக்குபக்கம், அலுவலகத்திற்கு கிழக்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கம் ஆவண எழுத்தர்களுக்கான அமருமிடம் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தில் கிழக்கு பார்த்த நுழைவு வாயில் சுமார் 30X6 அளவிலான ஹால் ஒன்று உள்ளது. அதில் சுவற்றில் வாஷ்பேஷின் மற்றும் அருகில் உள்ள மேஜையில் உணவு பாத்திரங்கள் உள்ளன. அதற்கு அப்பால் மேற்கு பக்கம் நுழைந்தவுடன் கிழக்குப்பார்த்து 30x20 அளவுள்ள ஹால் ஒன்று உள்ளது. மேற்படி ஹாலின் வடக்கு பக்கம் கணினி கூடிய சார்பதிவாளர் மேஜை அமைந்துள்ளது. மேற்படி ஹாலின் சார்பதிவாளர் அருகில் தெற்கு பக்கம் அலுவலக உதவியாளர் மேஜை அமைந்துள்ளது. அலுவலக உதவியாளர் மேஜைக்கு தெற்குப்பக்கம் கிழக்குபார்த்ததுபோல் போட்டோகிராபர் மேஜை அமைந்துள்ளது. போட்டோகிராபர் மேஜையையொட்டி தெற்குபக்கம் களப்பணி ஆய்வாளர் இருக்கை அமைந்துள்ளது. களப்பணி ஆய்வாளருக்கு கிழக்குப்பக்கம் வடக்கு பார்த்தாற்போல் உதவியாளர் இருக்கை அமைந்துள்ளது. மேற்படி ஹாலின் மேற்கு பக்கம் சுமார் 10X20, 10X10, 10X15, 10X10 அளவுகள் உள்ள ஆவண காப்பகங்கள் உள்ளது. மேற்படி ஹாலின் தெற்குப்பக்கம் அலுமினிய சட்டத்தால் தடுக்கப்பட்டுள்ள 8X10 அளவுள்ள மூன்று தற்காலிக பணியாளர்களுடன் கூடிய கணினி அறை, அதன் கிழக்குப்பக்கம் 7X20 அளவுள்ள கணினி அறை உள்ளது. மேற்படி அலுவலகத்தில் சார் பதிவாளர் இருக்கையில் திரு.செ.மகேஸ்ராஜா, உதவியாளர் (பொறுப்பு சார்பதிவாளர்) அவர்களும், அவரது இருக்கைக்கு வலதுபக்கம் இருந்த மேஜையில் அலுவலக உதவியாளர் திரு.கா.கணேசன் அவர்களும், போட்டோகிராபர் மேஜை இருக்கையில் திரு.ம.பிரேம்குமார் மற்றும் திரு.ரா.முத்து அவர்களும், உதவியாளர் இருக்கையில் திரு.முருகன் அவர்களும், இளநிலை உதவியாளர் இருக்கை காலியாக இருந்தது. அதில் பணியாற்றும் திருமதி.பி.சுதா, என்பவர் மதிய உணவுயிடைவேலைக்கு சென்றிருந்தார். மேலும் உதவியாளர்கள் அழகுமலை மற்றும் சுகுமார் ஆகியோர் இருக்கைகள் காலியாக இருந்தது. அவர்களை பற்றி விசாரிக்க மதிய உணவு இடைவேலைக்கு சென்றுவிட்டதாக சார்பதிவாளர் கூறினார். அதற்கடுத்து இருந்த கணினி அறையில் தற்காலிக கணினி பணியாளர்கள ஹேமலதா, சண்முகபிரியா, சைத்அலிபாத்திமா ஆகியோர்கள் ஆஜரில் இருந்தார்கள், மற்றொரு கணினி அறை காலியாக இருந்தது. இவர்கள் தவிர அலுவலகத்திற்குள் போடிநாயக்கனூர், டி.வி.கே.கே. நகர், 4வது தெரு, அப்பாவு மகன் திரு.கார்த்திக் அவர்களும், போடிநாயக்கனூர், பங்கஜம் பிரஸ், தெற்குதெரு, ராமன் மகன் திரு.முருகன் அவர்களும், போடிநாயக்கனூர், 12A, தென்றல்நகர் சுந்தரராஜ் மகன் திரு.சிவசங்கரன் அவர்களும், போடிநாயக்கனூர், 30வது வார்டு இளங்கோவடிகள் தெரு, கார்மேகம் மகன் திரு.சங்கர் அவர்களும், போடிநாயக்கனூர், வருவாய் ஆய்வாளர் ரோடு, நகராட்சி காலனி, எண்.5, வார்டு 13ல் உள்ள பெருமாள் மகன் பிரகாஷ் அவர்களும்

மற்றும் சார்பதிவாளர் அவர்களின் ஓட்டுனர் உத்தமபாளையம் தாலுகா, அப்பிபட்டி அஞ்சல், கரிச்சிபட்டி காலனி குப்புசாமி மகன் திரு.இளங்கோவன் ஆகியோர்கள் ஆஜரில் இருந்தனர். மேற்படி அலுவலகத்தினை சோதனையிட அலுவலக கிழக்கு பார்த்த நுழைவு வாயிலில் உள்ள ஹாலில் வடக்கு சுவற்றில் உள்ள வாஷ்பேசின் பின்புறம் வெள்ளைநிற பாலிதீன் கவரில் சுற்றி வைக்கப்பட்ட ரூ.12,760/-ம், மேற்படி கட்டிடத்தின் பிரதான ஹாலின் வடக்கு பக்கம் சார்பதிவாளர் மேஜை அருகில் உள்ள ஜன்னலில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணத்தினுள் ரூ.19,560/-ம, மேற்படி ஹாலின் மேற்கு பக்கம் உள்ள ஆவண காப்பகங்களில் ரூ.30,000/-ம், இவற்றை தவிர அலுவலகத்தினுள் இருந்த போடிநாயக்கனூர், டி.வி.கே.கே. நகர், 4வது தெரு, அப்பாவு மகன் திரு.கார்த்திக் என்பவரிடம் ரூ.24,200/- கைப்பற்றப்பட்டது. அதில் ரூ.1,150/- அவரது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், ரூ.1,150-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, மீதமுள்ள ரூ.23,050/- தனது பத்திர பதிவிற்காக சார்பதிவாளருக்கு கொடுப்பதற்கு வைத்திருந்ததாக கூறியதால், கைப்பற்றப்பட்டது. போடிநாயக்கனூர், பங்கஜம் பிரஸ், தெற்குதெரு, ராமன் மகன் திரு.முருகன் என்பவரிடம் . ரூ.4500/- கைப்பற்றப்பட்டது. அதில் ரூ.1,500/- அவரது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், ரூ.1,500-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, மீதமுள்ள ரூ.3000/- தனது பத்திர பதிவிற்காக சார்பதிவாளருக்கு கொடுப்பதற்கு வைத்திருந்ததாக கூறியதால், கைப்பற்றப்பட்டது. போடிநாயக்கனூர், 12A, தென்றல்நகர் சுந்தரராஜ மகன் திரு.சிவசங்கரன் என்பவரிடம் ரூ.2800/- கைப்பற்றப்பட்டது. அதில் ரூ.300/- அவரது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், ரூ.300-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, மீதமுள்ள ரூ.2,500/- தனது பத்திர பதிவிற்காக சார்பதிவாளருக்கு கொடுப்பதற்கு வைத்திருந்ததாக கூறியதால், கைப்பற்றப்பட்டது. போடிநாயக்கனூர், 30வது வார்டு இளங்கோவடிகள் தெரு, கார்மேகம் மகன் திரு.சங்கர் என்பவரிடம் ரூ.10,610/-கைப்பற்றப்படடது. அதில் ரூ.610/- அவரது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், ரூ.610-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, மீதமுள்ள ரூ.10,000/- தனது பத்திர பதிவிற்காக .சார்பதிவாளருக்கு கொடுப்பதற்கு வைத்திருந்ததாக கூறியதால், கைப்பற்றப்பட்டது, ஆக மொத்தம் ரூ.1,00,870/- இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுசம்மந்தமாக ஆஜரில் இருந்த அலுவலர்களிடம் விசாரிக்க அதற்கு அவர்கள் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்தப்பணம் ரூ.1,00,870/- சந்தேகத்திற்கு இடமான கணக்கில் வராத பணமாகக் கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் சம்மந்தப்பட்ட ஆவண எழுத்தர்களிடம் கைப்பற்றப்பட்ட பணத்தை பற்றி விசாரிக்க, அந்த பணமானது சார்பதிவாளருக்கு தற்காலிக பணியாளர் பிரகாஷ் மூலம் கொடுப்பதற்கு வைத்திருந்ததாக கூறினார்கள். மேற்படி நபர்களின் வாக்குமூலங்களை ஆய்வுக்குழு அலுவலர் விசாரித்து தனித்தனியே பதிவு செய்தார். மேலும் பிரகாஷ் என்பவரை விசாரிக்க தான் சார்பதிவாளருக்கு உதவியாக அவர் சொல்லும் வேலைகளை செய்து வருவதாகவும், சார்பதிவாளர் அவர்களுக்கு பத்திர எழுத்தர்கள் மற்றும் பத்திர பதிவிற்காக வரும் நபர்கள் கொடுக்கும் செலவுக்கான பணத்தை பெற்று சார்பதிவாளர் திரு.செ.மகேஸ்ராஜா வசம் கொடுப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இதற்காக சார்பதிவாளர் தினமும் தனக்கு ரூ.500 தருவதாகவும், தெரிவித்தார். இன்று தான் வசூல் செய்வதற்குள் லஞ்சஒழிப்பு போலீசார் தன்னால் கலெக்ஷன் செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார். மேற்படி நபரின் வாக்குமூலம் ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்டது. இவ்வலுவலகத்தில் மொத்தம் 33 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இதில் கிரைய ஆவணங்கள் 16 (பதிவேடு வரிசை எண்.5396 முதல் 5424வரை) பவர் ஆவணம் 1, இரசீது ஆவணம் 3, உயில் ஆவணம் 2, மற்றவைகள் புத்தகம் 4ல் 2, அக்ரிமெண்ட் ஆவணங்கள் 2, குடும்ப தானசெட்டில்மெண்ட் 2, அக்ரிமெண்ட் இரத்து ஆவணம் 2, சம்மத பத்திரம் ஆவணம் 1 மற்றும் உரிமை ஆவணம் (MOD) 2 ஆகியவை பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பதிவுகளுக்கு இணைவழியில் முத்திரை தீர்வை ரூ.61,560/-ம் மற்றும்

இணைவழியில் பதிவுக்கட்டணம் ரூ.2,93,160/-ஆகும். இதில் வங்கிவரைவோலையாக எதுவும் இல்லை. இவைபோக அலுவலகத்தில் இருந்த பணம் சம்மந்தமாக சார்பதிவாளரிடம் கேட்டபொழுது சரியான பதில் ஏதும் தெரிவிக்காததால் இந்த பணம் லஞ்சப்பணமாக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக அலுவலர்கள் தாங்கள் கொண்டுவரும் பணத்தை பதிவு செய்வதற்கு தனியாக தினசரி பண கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படுகிறது. மேலும் மேற்படி ஆஜரிலிருந்த அலுவலர்கள் மற்றும் வெளியிலிருந்து வந்திருந்த பணியாளர்கள் அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்த பணம், தங்களது சொந்தப் பணம் என்று கூறியதின்பேரில் அந்தப் பணம் அவர்கள் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் கொடிநாள் வசூல் ஏதும் செய்யவில்லை. கொடிநாள் வசூல் பதிவேடு பற்றி விசாரிக்க பதிவேடு இன்று (04.11.2020) எதுவும் பராமரிக்கவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் நவம்பர் மாதத்திற்கான அலுவலகப் பணியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கான வருகைப் பதிவேடு, தனிநபர் பண கையிருப்பு பதிவேடு பக்கம் 1 முதல் 36 வரை, 04.11.2020ம் தேதி பத்திரபதிவு "அ" பதிவேடு நகல், திரு.செ.மகேஸ்ராஜா, உதவியாளர் (முழு கூடுதல் பொறுப்பு சார்பதிவாளர்) அவர்களுக்கு பெரியகுளம் மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) அவர்கள் ந.க.எண்.3803/அ1/2019-3, நாள்.23.12.2019ம் தேதியிட்ட செயல்முறை ஆணை(பணியாணை), திரு.ரா.அழகுமலை அவர்களுக்கு பெரியகுளம் மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) அவர்கள் ந.க.எண்.3803/அ1/2019-3, நாள்.23.12.2019ம் தேதியிட்ட செயல்முறை ஆணை(பணியாணை) ஆகிய நகல்களில் மேற்படி அலுவலக சார்பதிவாளர், போடிநாயக்கனூர் அவர்களின் கையொப்பம் பெற்று பெறப்பட்டது. மேற்படி ஆவணங்களைத்தவிர வேறு எந்தவித ஆவணங்களும் கைப்பற்றப்படவில்லை. மேலும் இச்சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இச்சோதனையின்போது இருந்த தேனிமாவட்ட சார்பதிவாளர் அலுவக அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மனரீதியாகவோ எவ்வித துன்புறுத்தல்களும் ஏற்படுத்தப்படவில்லை. திடீர் இணை ஆய்வு 04.11.2020ம் தேதி தேனி மாவட்ட போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் மற்றும் தேனிமாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின்போது கணக்கில் வராத ரூ.54,050, 04.11.2020ம் தேதி பதியப்பட்ட பதிவுகள் சம்மந்தமாக சார்பதிவாளருக்கு வழங்க இருந்த பணம் ரூ.46,820 ஆகியவை மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மேல்நடவடிக்கைகாக இக்கடிதம்மூலம் தங்களுக்கு அனுப்புகின்றேன். எனவே, மேற்படி சார்பதிவாளர் திரு.செ.மகேஸ்ராஜா மற்றும் அலுவலர்கள்மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க தங்களிடம் அளிக்கின்றேன். ஒப்பம்/-XXXXX 05.11.2020 (மு.தாஜுதீன்), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம்.

Sir, Received the report today (05.11.2020) at 11.00 hrs along with Joint Surprise Check proceedings, dated: 04.11.2020 5 Statements, Seized Documents, Cash Rs.1,00,870/-. After obtaining permission from the Superior Officers, I (Tmt.R.Geetha, Inspector of Police, V&AC, Theni) registered a case in Theni V&AC Cr.No.04/2020 u/s.102CrPC and 7, 8 of Prevention of Corruption Act – 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act—2018 on 05.11.2020 at 11.30 hrs Sd/-XXXXX (R.Geetha), Inspector of Police, V&AC, 05.11.2020.

The original FIR along with report of Tr.M.Thajudeen, Joint Surprise check proceedings dated.04.11.2020 and statements, submitted to the Hon'ble Special judge , Special Court for the Trial of cases under PC Act, Theni and other copies were sent to the officers concerned.

Guthrie
5/11/2020
Inspr / VAC
Theni.

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI CORRUPTION
THENI DISTRICT
THENI.